

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வார்டு116 மற்றும் வார்டு114க்குட்பட்ட முப்தி அமீருல்லா தெருவில் மழைநீர் வடிகால் பணி மேற்கொள்ளும் போது வீடுகளை இழந்த 20 நபர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் வீடு ஒதுக்கீட்டு ஆணைகளை நேற்று முன்தினம் (1.6.2023) சென்னை முகாம் அலுவலகத்தில் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சர் தா.மோ. அன்பரசன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர்/தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத் தலைவர் செல்வி அபூர்வா, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் பி.சங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நாடாளுமன்றத்தின் மாண்பைக் காப்போம்!

## – ஆனந்த விகடன் தலையங்கம்!

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவின் நாடாளுமன்ற நடைமுறைகளை கவனிப்பதற்கு வெளிநாடுகளில் இருந்தெல்லாம் பிரதிநிதிகள் வருவதுண்டு. ஒவ்வொரு பிரதேசத்துக்கும் வெவ்வேறு எதிர்பார்ப்புகளும் தேவைகளும் உள்ள மிகப்பெரிய இந்த தேசத்தில் பல மொழிகள் பேசும் மக்களை நம் எம்.பிக்கள் நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர். முக்கியத்துவம் வாய்ந்த தேசப் பிரச்னைகளை விவாதித்து முடிவுகள் எடுப்பதும், மக்கள் நலனுக்காக சட்டங்களை இயற்றுவதும் நாடாளுமன்றத்தின் முக்கியப் பணிகள்.

ஆனால், 'நாடாளுமன்றத்தில் அமளி', 'நாடாளுமன்றம் முடங்கியது' என்றே சமீபகாலமாக செய்திகளில் இடம் பிடிக்கிறது அந்த அவை. எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்ட காலம் போய், ஆளுங்கட்சியே அமளியில் இறங்கி அவையை முடக்கிய காட்சியை சமீபத்தில் முடிந்த கூட்டத்தொடரில் பார்த்தோம். நான்காண்டுகள் ஆகியும் இன்னமும் மக்களவைக்குத் துணை சபாநாயகர் இல்லை. பிரதமரோ அவைக்கு அதிக நாள்கள் வருவதில்லை. மிகக்குறுகிய காலமே நாடாளுமன்றம் செயல்பட்ட சாதனையை கடந்த நான்கு ஆண்டுகள் பிடித்துள்ளன. எட்டுக் கூட்டத்தொடர்கள் குறித்த தேதிக்கு முன்பாக முடித்து வைக்கப்பட்டுள்ளன.



பல முக்கியமான மசோதாக்கள் அவையில் விவாதமே இல்லாமல் நிறைவேற்றப்படுகின்றன. உச்ச நீதிமன்றமே இது குறித்துக் கவலை தெரிவித்தது. சர்ச்சைக்குரிய மசோதாக்களை நாடாளுமன்ற நிலைக்குழுவுக்கு அனுப்பி விவாதிக்கும் மரபும் குறைந்திருக்கிறது. நாடாளுமன்றத்துக்கு வெளியே அவசரச் சட்டங்களை அரசு கொண்டு வருவது இரண்டு மடங்கு அதிகரித்திருக்கிறது. நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு மத்திய அரசு எந்த அளவுக்கு மதிப்பளிக்கிறது என்பதை உணர்த்தும் புள்ளி விவரங்கள் இவை.

இப்படிப்பட்ட சூழலில்தான் புதிய நாடாளுமன்றக் கட்டடம் பல்வேறு சர்ச்சைகளுக்கு மத்தியில் திறப்பு விழா கண்டிருக்கிறது. இரண்டரை ஆண்டுகளில், சுமார் 1,200 கோடி ரூபாய் செலவில் எழுப்பப்பட்டுள்ளது புதிய நாடாளுமன்றம், இதை பிரதமர் நரேந்திர மோடி தலைமையேற்றுத் திறந்து வைத்து, செங்கோலையும் அங்கு நிறுவியிருக்கிறார்.

அரசியல் சட்டப்படி, நாடாளுமன்ற அமைப்புக்குத் தலைமை தாங்கும் அதிகாரத்தைப் பெற்றிருப்பவர் குடியரசுத் தலைவர்தான். 'இதை ஆளுங்கட்சியின் பிரதிநிதியான பிரதமர் திறப்பதைவிட, எல்லோருக்கும் பொதுவானவரான குடியரசுத் தலைவர் திறந்து வைப்பதுதான் ஏற்புடையதாக இருக்கும்' என்று சொல்லி, 20 எதிர்க்கட்சிகள் இந்த விழாவைப் புறக்கணித்துவிட்டன. ஆனாலும் குடியரசுத் தலைவர் இல்லாமலேயே பிரதமர் முன்னிலைப் படுத்தித் திறப்பு விழாவை நடத்தி முடித்திருக்கிறது அரசு.

நாடாளுமன்றம் என்பது அனைத்துக் கட்சிகளுக்குமான அவை. அதன் விவாதங்களில் பங்கெடுக்கும் உரிமையுள்ள எல்லாக் கட்சிகளையும் அதன் உருவாக்கத்திலும், திறப்பு விழாவிலும் பங்கெடுக்கச் செய்திருக்க வேண்டும். அது, புதிய கட்டடத்திலாவது ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சிகளும் இணைந்து ஆக்பூர்வமான விவாதங்களை முன்னெடுக்க ஒரு தொடக்கமாக இருந்திருக்கும். நாடாளுமன்றத்தின் மாண்பைக் காப்பது என்பது வெறுமனே கட்டடங்களை உருவாக்குவதில் இல்லை, அதைப் பயன்படுத்தும் முறையில்தான் இருக்கிறது.

நன்றி : ஆனந்த விகடன் (7.6.2023)

## மல்யுத்த வீராங்கனைகள் 'உரிமை மல்யுத்தம்' செய்வது சங்கடமளிக்கிறது!

# தேசத்தின் மகள்களின் உரிமைகளை ஒன்றிய அரசு பாதுகாக்க வேண்டியது அவசியம்!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, ஜூன் 3 -

புதுடெல்லியில் மல்யுத்த வீராங்கனைகள் 'உரிமை மல்யுத்தம்' செய்வது சங்கடத்தை தருகிறது என்றும் இந்த தேசத்தின் மகள்களின் உரிமைகளை ஒன்றிய அரசு பாதுகாக்க வேண்டுமென்பதே மக்களின் விருப்பமாகும் என 'தினகரன்' நாளேடு 1.6.2023 தேதியிட்ட இதழில் 'உரிமை மல்யுத்தம்' என்ற தலைப்பில் தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அது வருமாறு:-

ராணுவம், காவல்துறைக்கு அடுத்தபடியாக மக்களிடையே தேசப்பற்றை உணர்வுரீதியாக வெளிப்படுத்தும் ஒரு துறை விளையாட்டு. இளம்வயதில் இருந்தே வீரர்களும், வீராங்கனைகளும், தங்களது நேரத்தை பிற பொழுது போக்கு அம்சங்களுக்காக செலவிடாமல், விளையாட்டில் சாதிக்க வேண்டுமென்ற ஆவலில் தீவிரமாக பயிற்சி செய்து நாட்டுக்காக பெருமை சேர்க்கின்றனர். அப்படிப்பட்டவர்களை கொண்டாட வேண்டிய ஒன்றிய அரசு, கங்கை ஆறு போல கண்ணீர் விட விட்டதுதான் கொடுமையிலும் கொடுமை.

இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் தலைவரான பா.ஜ. எம்.பி. பிரிஜ் பூஷன் சரண் சிங் மற்றும் சில பயிற்சியாளர்கள் தங்களுக்கு, பாலியல் தொல்லை அளித்ததாக மல்யுத்த வீராங் கனை



தினகரன்

ஜுன் 1, 2023 வியாழக்கிழமை

உரிமை மல்யுத்தம்

ராணுவம், காவல்துறைக்கு அடுத்தபடியாக மக்களிடையே தேசப்பற்றை உணர்வுரீதியாக வெளிப்படுத்தும் ஒரு துறை விளையாட்டு. இளம்வயதில் இருந்தே வீரர்களும், வீராங்கனைகளும், தங்களது நேரத்தை பிற பொழுதுபோக்கு அம்சங்களுக்காக செலவிடாமல், விளையாட்டில் சாதிக்க வேண்டுமென்ற ஆவலில் தீவிரமாக பயிற்சி செய்து நாட்டுக்காக பெருமை சேர்க்கின்றனர். அப்படிப்பட்டவர்களை கொண்டாட வேண்டிய ஒன்றிய அரசு, கங்கை ஆறு போல கண்ணீர் விட விட்டதுதான் கொடுமையிலும் கொடுமை.

இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் தலைவரான பாஜ எம்பி பிரிஜ் பூஷன் சரண் சிங் மற்றும் சில பயிற்சியாளர்கள் தங்களுக்கு, பாலியல் தொல்லை அளித்ததாக மல்யுத்த வீராங்கனைகள் ...

கள் குற்றச்சாட்டு தெரிவித்தனர். இதன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, கடந்த ஜனவரி மாதமே, ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற பிரபல வீராங்கனைகளான சாக்சி மாலிக், வினேஷ் போகத், வீரர் பஜ்ரங் புனியா ஆகியோர் டெல்லி ஜந்தர் மந்தரில் போராட்டம் நடத்தினர்.

தொடர் போராட்டத்தின் விளைவாக பிரபல குத்துச்சண்டை வீராங்கனை மேரி கோம் தலைமையிலான குழு வீராங்கனைகளிடம் விசாரணை நடத்தியது. ஆனாலும், பா.ஜ.வைச் சேர்ந்த எம்.பி. மீதான குற்றச்சாட்டு என்பதால், ஒன்றிய அரசு இந்த பிரச்சினையை மூடி மறைக்கவே பார்த்தது. புகாரின் மீது வழக்கும் பதிவு செய்யப்படவில்லை. உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்த பின்னரே, பா.ஜ. எம்.பி. பிரிஜ் பூஷன் சரண் சிங் மீது போக்சோ உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. தங்களது குற்றச்சாட்டு மீது உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, டெல்லி ஜந்தர் மந்தரில் வீராங்கனை கள் மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டனர். தங்களுக்கு உரிய நியாயம் வழங்கக் கோரி, கடந்த மே 28ம் தேதி திறப்பு விழா கண்ட புதிய நாடாளுமன்ற வளாகத்தை நோக்கி வீராங்கனை கள் முற்றுகையிட சென்றனர். இவர்களை போலீசார் தடுத்து, வலுக்கட்டாயமாக, தரதரவென இழுத்துச் சென்ற காட்சிகள் நாடு முழுவதும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. டெல்லி போலீசாரின் இந்த செயலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் உட்பட பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்திருந்தனர்.

இப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காவிட்டால் இந்தியா கேட் பகுதியில் சாகும் வரை போராட்டம் நடத்தப் போவதாகவும், ஒலிம்பிக் உட்பட பல விதமான போட்டிகளில் வென்ற பதக்கங்களை கங்கையில் வீசி எறியப்போவதாகவும் அறிவித்து வீராங்கனைகள் சென்றதும் பரபரப்பை ஏற்படுத்தியது. வீராங்கனைகள் போராட்டத்திற்கு ஆதரவாக விவசாயிகள் சங்கமும் குரல் கொடுத்தது பாராட்டுக்குரிய ஒன்று. கங்கை கரைக்கு வந்த வீராங்கனைகளிடமிருந்து பதக்கங்களை பெற்ற பாரதிய கிஷான் சங்கம் மற்றும் சம்யுக்தா கிசான் மோர்ச்சா விவசாயிகள் அமைப்புகள், இப்பிரச்சினைக்காக நாடு தழுவிய போராட்டத்தில் இறங்குவோம். ஒன்றிய அரசுக்கு 5 நாள் கெடு விதிப்போம். அதற்குள் நடவடிக்கை எடுக்காவிட்டால் கங்கையில் பதக்கங்களை வீசுவோம். விவசாயிகள் போராட்டம் போல, தேசிய அளவில் கொண்டு செல்வோம் எனக்கூறியது ஒன்றிய அரசுக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்தி உள்ளது.

மல்யுத்தம் என்பது தன்னை எதிர்கொள்ளும் பலசாலியை, உடல் பலம், மனபலத்தை வெளிப்படுத்தி களத்தில் வீழ்த்துவதாகும். ஆனால், இங்கு மல்யுத்த வீராங்கனைகள் அரசுக்கு எதிராக 'உரிமை மல்யுத்தம்' செய்வது சங்கடத்தை தருகிறது. ஒன்றிய அரசு இந்த விவகாரத்தில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். இந்த தேசத்தின் மகள்களின் உரிமைகளை பாதுகாக்க வேண்டுமென்பதே மக்களின் விருப்பமாகும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

# டெல்லி மக்களுடன் துணை நிற்பதாக தமிழ்நாடு அரசு உறுதியளித்துள்ளது!

## டெல்லி முதல்வர் கெஜ்ரிவால் பேட்டி!

சென்னை, ஜூன் 3-

டெல்லி மக்களுடன் துணை நிற்பதாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மிக்க நன்றி. இன்றைய தினம் நானும், பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் சிங் ஆகியோர் அவரை சந்திக்க வந்தபோது எங்களை அன்பாக வரவேற்று உபசரித்தார்.

அவரோடு ஒன்றிய அரசின் நிதி குறித்து விசாரித்தபோது எங்களுக்கு ஆதரவாக ஸ்டாலின் அவர்கள் கருத்து தெரிவித்துள்ளார் என்று டெல்லி முதல்வர் கெஜ்ரிவால் சென்னையில் பேட்டி அளித்துள்ளார்.

அவரது பேட்டி வருமாறு:-



ஆளுநர் விவகாரம் தொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை சென்னையில் உள்ள அவரது வீட்டில் டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலும், பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் சந்தித்து பேசினர். இதை தொடர்ந்து 3 மாநில முதலமைச்சர்கள் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்து பேட்டியளித்தனர்.

அப்போது பேசிய டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால், "ஜனநாயகத்தை பாதுக்காப்பதற்காகவே திமுகவை நாடி வந்துள்ளோம். டெல்லி மக்களுடன் துணை நிற்பதாக தமிழ்நாடு அரசு உறுதியளித்துள்ளது. டெல்லி மாநில மக்களின் நலனுக்காக திமுக அரசு தோள் கொடுத்துள்ளது. தேர்வு செய்யப்பட்ட அரசின் அதிகாரத்தை பறிக்கக் கூடாது என உச்சநீதிமன்றமே தெரிவித்திருக்கிறது. மத்திய அரசின் அவசர சட்ட மசோதாவை எதிர்க்கட்சிகள் மாநிலங்களவையின் எதிர்க்க வேண்டும்" என தெரிவித்துள்ளார்.

வரும் மழைக்கால கூட்டத்தொடரில் மத்திய கொண்டு வந்த அவசரச்சட்டம் வரும். ராஜ்யசபாவில் அவர்களுக்கு 93 இடங்கள் உள்ளன. பாஜக அல்லாத கட்சிகள் அனைத்தும் வந்தால் அவர்களை தோற்கடிக்க முடியும். மு.க. ஸ்டாலினின் ஆதரவிற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்க்கட்சிகள் மாநிலங்களவையில் எதிர்க்க வேண்டும். மாநிலங்களவையில் சட்டத்தை எதிர்த்து வென்றால் 2024 நாடாளுமன்ற தேர்தலுக்கு முன் அரையிறுதியில் வென்றது போல் இருக்கும்" என பேசினார்.

## சேலம் பட்டாசுக் கிடங்கில் விபத்து:

# உயிரிழந்தோர் குடும்பத்திற்கு தலா ரூ.3 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஜூன் 3 -

சேலம் மாவட்டத்தில் பட்டாசுக் கிடங்கில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்து நேற்று முன்தினம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு: -

சேலம் மாவட்டம், சேலம் வட்டம், எஸ்.கொல்லப்பட்டி கிராமத்தில் இயங்கி வந்த தனியாருக்குச் சொந்தமான பட்டாசுக் கிடங்கில் இன்று எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் சேலம் எம். கொல்லப்பட்டியைச் சேர்ந்த நடேசன், த/பெ.சென்றாயன் (வயது 50), சதீஷ்குமார், த/பெ.கந்தசாமி (வயது 35) மற்றும் அடையாளம் தெரியாத ஒரு பெண் உட்பட மூன்று பேர் உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் சேலம், எம். கொல்லப்பட்டியைச் சேர்ந்த திருமதி. வசந்தா, க/பெ. பழனிசாமி, (வயது 45), திருமதி.மோகனா, க/பெ.வடிவேல் (வயது 38), திருமதி.மணிமேகலா, க/பெ.ராஜா (வயது 36), திருமதி.மகேஸ்வரி, க/பெ.வெங்கடேசன் (வயது 32), பிரபாகரன், த/பெ.அண்ணாதுரை, (வயது 31) மற்றும் திருமதி. பிருந்தா, க/பெ.மோகன் (லேட்) (வயது 28) ஆகிய ஆறு பேருக்கும் சிறப்பு சிகிச்சை அளிக்க அறிவுறுத்தியுள்ளேன்.

உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் ஆறு பேருக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## அரசு உத்தரவை மீறி

# முன்கூட்டியே பள்ளிகளைத் திறந்தால் நடவடிக்கை!

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி எச்சரிக்கை!

சென்னை, ஜூன் 3 -

"முன்கூட்டியே பள்ளிகளை திறக்கக் கூடாது, மீறினால் நடவடிக்கை எடுக்கப்படும் என பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

சென்னை ராமாபுரம் தனியார் பள்ளி நேற்று அரசு உத்தரவை மீறி திறக்கப்பட்டது குறித்து பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறியதாவது: -

கோடை வெயில் அதிகமாக இருப்பதையொட்டி பள்ளிகள் திறக்கும் தேதியை 7ஆம் தேதிக்கு தள்ளி வைத்திருக்கிறோம். முன்கூட்டியே பள்ளிகளை திறக்கக் கூடாது. அதை மீறி தனியார் பள்ளிகள் திறந்திருந்தால் அந்த பள்ளிகளின் மீது அதிகாரிகள் விசாரணை நடத்தி நடவடிக்கை



மேற்கொள்வார்கள்.

சி.பி.எஸ்.இ. பள்ளிக் கூடங்கள் அதுவும் 10ம் வகுப்புக்கு மேல் திறந்திருக்கலாம். தனியார் மெட்ரிகுலேஷன் பள்ளிக் கூடங்கள் திறந்திருந்தால் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இது சம்பந்தமாக அதிகாரிகளுக்குத் தேவையான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. கல்வித் துறை அதிகாரிகள் மாவட்டவாரியாக இதுபற்றி விசாரித்து வருகின்றனர்.

இவ்வாறு அவர் கூறினார்.



நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் திருச்செங்கோடு வேலூர் ரோடு சி.எச்.பி. காலனியில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர் இரா.நடனசபாபதி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளரும், திருச்செங்கோடு ஜல்லிக்கட்டு பேரவை தலைவருமான எஸ்.எம்.மதுரா செந்தில் கலந்துகொண்டு கூட்டப் பொருட்கள் குறித்து விளக்கம் அளித்து பேசினார். இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# முத்தமிழறிஞர் கலைஞருக்கு முழு திருவுருவச்சிலை!

## எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமையில் நடந்த - நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. கூட்டத்தில் தீர்மானம்!

நாமக்கல், ஜூன் 3 -

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கலைஞருக்கு முழு திருவுருவச் சிலை அமைக்கப்படும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமையில் நடைபெற்ற நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் திருச்செங்கோடு வேலூர் ரோடு சி.எச்.பி. காலனியில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. மாவட்டக் கழக அவைத் தலைவர் இரா.நடனசபாபதி தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளரும், திருச்செங்கோடு ஜல்லிக்கட்டு பேரவை தலைவருமான எஸ்.எம்.மதுரா செந்தில் கலந்து கொண்டு கூட்டப் பொருட்கள் குறித்து விளக்கம் அளித்து பேசினார்.

கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர் மயில்சாமி, சாந்தி, பொருளாளர் ராஜாராம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.நடேசன், டி.ரங்கசாமி, ஒ.ஆர்.செல்வராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் திருநாவுக்கரசு, ரவிச்சந்திரன், வேலுமணி, சாமிநாதன், சிவக்குமார், இந்திராணி மயில்சாமி, மாநில நிர்வாகிகள் பரமானந்தன், திருநங்கை ரியா, ஒன்றியச் செயலாளர்கள் சண்முகம், தங்கவேல், செல்வராஜ், வட்டூர் தங்கவேல், சண்முகம், நாச்சிமுத்து, இளங்கோவன்,

நகரக் கழகச் செயலாளர்கள் செல்வம், கார்த்திகேயன், குமார், ஞானசேகரன், பேரூர்ச் செயலாளர் கருணாநிதி, திருமலை, ரமேஷ்பாபு, முருகன், ராமமூர்த்தி, ராமலிங்கம், கார்த்திக்ராஜ், முருகவேல் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழா வருகின்ற ஜூன் 3 ஆம் தேதி சென்னையிலும் ஜூன் 20 ஆம் தேதி திருவாரூரிலும் நடைபெற இருப்பதால் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும்.

நாளை (3 ஆம் தேதி) நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட 3 தொகுதிகளில் உள்ள அனைத்து பகுதிகளிலும் கழக கொடிக் கம்பங்களுக்கு வர்ணம் பூசி இருவண்ணக் கொடியேற்றி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டு விழாவை ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள் பொறுப்பேற்று சிறப்பாக கொண்டாடுவது,

நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட சட்டமன்ற தொகுதிகளில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் புகழ் ஓங்கும் வகையில் தொடர்ந்து ஆண்டு முழுவதும் கருத்தரங்கு மற்றும் பொதுக் கூட்டங்கள் நடத்துவது,

நாமக்கல் மேற்கு மாவட்டம் முழுவதும் ஒன்றிய நகர பேரூர் சார்பில் அரசின் விதிமுறைகளை பின்பற்றி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முழு உருவச்சிலை மற்றும் மார்பளவு சிலைகள் அமைப்பது,

அர்த்தநாரீஸ்வரர் மற்றும் சுப்பிரமணியர் கோவிலுக்கு ரூ. 3.22 கோடியில் புதிய திருத்தேர் செய்யவும், அர்த்தநாரீஸ்வரர் மலைக்கோயில் 72 ஆண்டுகளுக்கு பிறகு உற்சவம் மூர்த்திகளை சீரமைத்து புதுப்பொலிவு ஏற்படுத்தவும் உத்தரவு வழங்கிய தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோருக்கு நன்றி தெரிவித்து கொள்வது,

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாவட்டக் கழகச் செயலாளர் கூட்டத்தில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் அறிவிக்கப்பட்ட ஒரு கோடி உறுப்பினர் சேர்க்கையில் நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட எண்ணிக்கையில் 50 சதவீதம் மட்டுமே எட்டியுள்ள நிலையில் ஜூன் 2 ஆம் தேதிக்குள் உறுப்பினர் சேர்க்கையை கட்டாயம் நிறைவு செய்திட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.